Registered as a News Paper in Ceylon

P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்துசாதனம்

விரோதி ஞு (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - சுசு] யாழ்ப்பாணம்:- ஜயவருஷ புரட்டாதி மீ கரு உ வெள்ளிக்கிழமை (1, OCTOB. 1954) [இல - உசு]

## தமிழ் மக்களுக்கு மிருத்து சஞ்சீவி

———0—0———

## இன்று இன்றியமையாத ஒற்றுமை

———o———

## ஸ்ரீ பொன்னம்பலமும் பிற பெருமக்களும் ஆற்றவேண்டிய கடன்

———:0:———

திரு. ச. தியாகராசா

ஈழநாடு முழுவதையுமே அறநெறிபிறழாது யாவரும் இன்புற்று வாழுமாறு பண்டு ஆட்சிபுரிந்து, தமிழ்ப்பண்பாட்டுச் சிறப்பு மிளிரச் செய்த ஈழத் தமிழ் மக்கள், இன்று என்ன நிலையி லிருக்கிறார்களென்பது எடுத்துக் காட்டவேண்டியதொன்றல்ல. பேரறிஞர் தொடக்கம் பாமரமக்களீறாக இத் தொடர்பில் ஒரே மனத்தராயிருக்கின்றார்கள். பிரித்தாளும் முறையைப் பெரிதும் எடுத்தாண்டு, இன்றும் ஒல்லும் வகையில் அதை உபயோகப்படுத்திவரும் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்திலே நீதியாகப் பெற்ற உரிமைகளை இன்றுபெறவியலாதவர்களாய் வருந்துகின்றனர் தமிழ் மக்கள். மறைமுகமாகப் பல துறைகளில் எம உரிமைகள் அகற்றப்பட்டு அடக்கி ஒடுக்கி ஆளப்படுகின்றோம் என்னும் எண்ணம் மக்கள் மனங்களில் குடிகொண்டுவிட்டது. இக் கருத்தைத் தமிழ்ப் பேரறிஞர்கள் ஒருவர் இருவர் அல்லது ஒருசிலரல்லை, பலப்பலர் காலத்துக்குக் காலம் பத்திரிகைகளிலும் மேடைகளிலும் வெளியிட்டு வருகின்றனர். இத்தகைய நிலைமைக்குக் காரணமென்னவென்றால் எங்கள் ஒற்றுமைக் குறைவேயன்றிப் பிறிதன்றென்பது தமிழ் மக்கள் பெரும்பான்மையோர் ஒப்புக்கொள்ளுகின்றனர். பிரித்தானியரிலோ மற்றவர்களிலோ குறைகூறுதல் பேதைமையாகும்.

இக் காரணத்தாலேயே "ஈழத் தமிழினம் மீட்சி பெறுதற்குச் சமரசச்சான்றோர்சபை வேண்டும்" என்றும் தாழ்ந்த தமிழகமே! உன் அகக் கண்களை விரித்துப்பார்" என்றும், "தமிழ் மக்களே! சிந்தித்துப்பாருங்கள் — இன ஒற்றுமை உண்டாக்க ஆவன செய்யுங்கள்" என்றும் "வாழ்க்கை வளம்பெறச் செய்ய ஒரே ஒரு வழி — அறிவுடைய தமிழ்மக்கள் ஒன்று கூடுதல் வேண்டும்" என்றும் தலையங்கங்கள் பூண்டு முறையே 21-5-54 11-6-51, 18-6-54, 25-6-54ல் வெளிவந்த இந்துசாதன இதழ்களிலும் ஈழகேசரி முதலிய பத்திரிகைகளிலும் தமிழ் மக்களுள் ஒற்றுமை உண்டாக்க வழி காண வேண்டுமென்ற வேண்டுதல்கள் விடுக்கப் பெற்றன. அவ் வேண்டுதல்களின்படி சில முயற்சிகளும் நடைபெறுகின்றன. வேகமோ ஆமைவேகம்தான். இவைகளுக்கு ஸ்ரீ G. G. பொன்னம்பலம் காரணராயிருந்தாரல்லர் அவை எழுதப் பெற்ற காலத்தில் அவர் அரசியல் மௌனியாயிருந்தார். ஒற்றுமை என்பது உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத மிருத்து சஞ்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## நித்தியத்தில் அநித்தியமும் அநித்தியத்தில் நித்தியமும்

———=o=———

## இவ்வுண்மையை உணர்ந்தவர்களே உத்தமர்கள்

நித்தியம் என்றும் உள்ளது. அநித்தியம் தோன்றுதலும் நிலைத்தலும் மறைதலுமுடையது. நித்தியம் தோற்றக்கேடுகள் இல்லாதது. நமக்கும் ஏனைய உயிர்கட்கும் இவ்வுலகம் ஆதாரமாயிருப்பதுபோல அநித்தியத்துக்கு நித்தியம் ஆதாரமாய் அமைந்துள்ளது. நித்தியத்தை மெய்யென்றும் அநித்தியத்தைப் பொய்யென்றும் நாம் நினைக்கிறோம்.

"சிவ தொண்டன்"

வித்தின்றி மரந் தோன்றாது. நித்தியமின்றி அநித்தியமுந்தோன்றாது அறியமுடியாத வித்துட் பொருந்தியுள்ள சக்திகள் பல இலையாக — கிளையாக — மலராக — காயாக — கனியாகக் காட்சி தந்து நிற்கும்போது அதனை மரம் என்கிறோம். வித்தையும் அதன் சக்திகளையும் மறந்து நிற்கின்றோம். அது போல நமது உடம்பும் இவ்வுலகமும் அநித்தியமானவை என நினைக்கும்போது இவைகளுக்குஆதாரமாயுள்ள நித்தியத்தையும் நாம் மறந்து நிற்கிறோம். கம்பிகளினிடத்துச் செறிந்துள்ள மின்சார சக்தியைக் கண்ணாற் காண இயலாது. அது வெளிச்சமாகத் தோற்றந் தரும்போது அதனுண்மையை அறியமுடிகிறது. அறிவினால் அறியப்படும் உருவம் — சத்தம் முதலாயின; மண்—நீர் முதலாயின; பிறவெல்லாம் வெளிச்சம் போலும், எனவே காணப்படும் இவ்வுலகத்தைக் கொண்டு எம்போன்றோராற் காணமுடியாத நித்தியத்தை உணரமுடியும். அநித்தியம் இல்லையாயின் நித்தியம் ஒன்று இருப்பதின் உண்மையை அறிவதெவ்வாறு? ஒருபுடை உவமானமாக மின்சார விளக்குகளைத் தோற்றங்களாகவும், மின்சக்தியை நித்தியத்தின் சக்தியாகவும், மின்சாரத் தோற்றத்துக்கு நிலைக்களனை நித்தியமாகவுங் கூறலாம்.

வித்தொன்றிலிருந்து பல வித்துக்களும் — கிழங்கொன்றிலிருந்து பல கிழங்குகளும் — மரவள்ளித் தடியொன்றிலிருந்து பல மரவள்ளிச் செடிகளும் இவ்வாறே பிறவும் வருவதை நாம் காண்கின்றோம். இவையெல்லாம் தத்தம் இனத்தையே தரும் இயல்புடையன. அஃதேபோல் மனிதர் தம்மினந்தருவர் — மிருகம் முதலாயினவும் தம்மினமே தரும். நித்தியமோ பாராதி பூதங்களை—தாரகைகளை — ஞாயிறு, திங்கள் முதலாயினவற்றை — நம்மை—அது என்றும் அவையென்றும் சொல்லப்படும்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## இந்தியாவிலும் இசைநாட்டிய ஈழத்துச் சான்றோர்

[ "புகலியர்கோன்" புகல்வது ]

### 3. தில்லைநாத தம்பிரான்

இப்பெரியார் வடமராட்சியைச் சேர்ந்த வரணியிலே சைவ வேளாளர் குலத்தில் உதித்தவர். இவர் இளமையிலே இங்கேதானே கல்வி பயின்று சைவ ஒழுக்கம், சிவபத்தி முதலியவற்றிற் சிறந்தவராய், தமது மூதாதையரைப் பின்பற்றி, புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கவும், புண்ணிய தலங்களைத் தரிசிக்கவும் நோக்கங் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு இந்தியாவை யடைந்தார். இவர் சிதம்பர தரிசனஞ் செய்த காலத்திலே, அத்தலத்தில மகாதுறவியாகி வாசஞ் செய்த (யாழ்ப்பாணந் திருநெல்வேலி) ஞானப்பிரகாச சுவாமிகளைத் தமக்கு ஆசிரியராகக் கொண்டு அவரிடத்துப் பல நூல்களைப் பயின்று சிறந்த அறிஞரானார்.

நமது தம்பிரானார் சிதம்பரத்தில் வசித்தபோடமையாது, வேதாரணியஞ் சென்று அத் தலத்திற்றானேயிருந்து, மறைக்காட்டீசுவரரையும், யாழைப் பழித்தமொழியம்மையாரையும் அநுதினமும் வழிபட்டுத் திருத்தொண்டாற்றி அத்தலத்தையே தமக்கு வாசஸ்தானமாகக் கொண்டார்: யாழைப் பழித்த மொழியம்மையாரைத் தமது விசேஷ உபாசனாமூர்த்தமாகக் கொண்டு பூசிப்பாராயினர். செங்கற்றிருப்பணியாய் அமைந்திருந்த வேதாரணியத் திருக் கோயிலைக் கருங்கற்றிருப்பணியாயமைக்க வேண்டுமென்ற வேணவா இந்த உத்தமருள்ளத்திற் குடிகொண்டிருந்தது. ஆனால் அங்ஙனஞ் செய்து நிறைவேற்றப் பொருளில்லையே என்ற கவலை இப் பெரியாரைப் பிடித்து உபாதித்தது.

இங்ஙனமாக அக்காலத்திலே தஞ்சை மாநகரை இராசதானியாகக் கொண்டு அரசாண்ட அரசனுக்கு ஒரேயொரு மகளிருந்தாள். கல்வியறிவிலும் பேரழகிலுஞ் சிறந்த அந்த அரசகுமாரி, ஊழ்வயத்தாற் போலும், பைசாசத்தினாற் பீடிக்கப்பட்டுத் தன்னிலை கெட்டுப் பெரும் மாறுதலடைந்தாள். அதனைக் கண்ட அரசனுந் தேவியும், தாங்கொணாக் கவலையுற்றனர்; அரசன் தன்னாட்டிலும் அயல்நாடுகளிலுமுள்ள மந்திரவாதிகளையும் வைத்தியர்களையும் முறைமுறையாகத் தன் மாளிகைக்கு அழைத்துப் பார்வை பார்ப்பித்தும், வைத்தியஞ் செய்வித்தும் மணி மந்திர ஔஷதங்களால், தனது அரிய புதல்வியினுடைய நிலைமை திருந்தியதில்லையெனக் கண்டு கவலைக் கடலுள் மூழ்கினான்.

இச்செய்திகளை யறிந்த தில்லைநாத தம்பிரான் பயபக்தியோடு தமது உபாசனாமூர்த்தமாகிய யாழைப் பழித்த மொழியம்மையா

[தொடர்ச்சி 6ம் பக்கம்]

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். ஜய ஞூ புரட்டாதிமீ
கரு உ வெள்ளிக்கிழமை

## முதல் அமைச்சரின் மொழிக் கொள்கை

யாழ்ப்பாண மாநகருக்கு முதல் அமைச்சர் முறையில் சேர். ஜோன் கொத்தலாவல அவர்கள் புதன்கிழமையன்று வந்தபொழுது தமிழகத் தலைமை சால வரவேற்புபசாரம் நடந்தது பாராட்டுக்குரியது. முகந் திரிந்து நோக்குவதை தமிழகத்தார் முறையெனக் கொள்ளாராகையால் என்க.

மாபெரும் வரவேற்பிலளிக்கப்பட்ட உபசார உரைக்கு நன்றி கூறும்பொழுது முதல் அமைச்சர் அவர்கள் ஈழம் வாழ் மக்கள் அனைவரும் சாதி மத பேதமின்றி ஒற்றுமையுள்ளம் படைத்தவர்களாயிருப்பதே தமது கொள்கையும் ஆட்சிபீடத்திலிருக்கும் அரசியற் கொள்கையும் என்று கூறியதன் உரை நலத்தை ஏற்றுக் கொள்ளாதார் இருக்கமாட்டார்கள். பெரும்பான்மையினர் பெருந்தன்மையாகவும் சிறுபான்மையினர் ஐயுறவு கொள்ளாமலும் சினமூட்டாமலும் இருந்து வரவேண்டுமென்று பிரதமர் பேசியதில் சினமூட்டும் தீயகுணம் ஆட்பல ஆதிக்கதாரிடையேயும் இல்லாதிருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தால் ஒற்றுமையுணர்ச்சியும் நற்குணவளர்ச்சியும் நாட்டில் நலம்பெறத் தோற்றும் என்பதற்கையமின்று.

தாய் மொழிகளாம் தமிழுஞ் சிங்களமும் இலங்கையெங்கணும் ஒரே தகைமையுடையனவாய் அரசவரிசையுடன் பொலிய வேண்டுமென்பதே தமது கொள்கையும் ஆட்சிக் கட்சியினை ஆரம்ப முடியும் என்று முதல் அமைச்சர் கூறியதை வரவேற்கின்றோம். எனினும் சிறுபான்மையினர் ஐயுறவு எள்ளளவுமில்லாதகன்று விடுவதற்காகச் சிங்கள மக்கள் சார்பாகப் பாராளுமன்றம் புக்க அங்கத்தவர்கள் பெருந்தன்மையாக நடந்து ஈழத்தின் அரசியல் அமைப்பின் தமிழ் சிங்கள மொழிகளின அரச வரிசை முடிடைப் புதுத்திவிட்டாலன்றே சேர். ஜோன் கொததலாவலையின் ஒற்றுமை வாழ்க்கையைப்பற்றிய வரைவிலக்கணம் செயலிற் பொருந்தியதாயிருக்கும் .... .... ?

முதல் அமைச்சர் அவர்கள் யாழ்ப்பாண முற்றவெளியில் ஒற்றுமையைப் பற்றி யெடுத்துரைத்தவற்றை நாம் உள்ளத்துணர்ச்சியுடன் ஆதரிக்கின்றோம். இலங்கை மக்கள் இதுகாறும் நடந்தனவற்றை எடுத்து எடுத்து ஆராய்ந்து மாரிற் குற்றம் போடலாம் என்று நாழிகையை வீணுக்காது 'எங்கள் நாடு' என்ற ஒரே குரலில் அமைதியும் அன்புங் கிளைபெறவும் மனிதகுலம் மாண்பைப் பேணுதற்குமாக உழைக்க நாளை நாளை என்னுது இன்னே ஒற்றுமைப்பட வேண்டும்!

# தமிழுக்கும் - சிங்களத்துக்கும் சமஉரிமை

—:o:—

## வெறும் வாய்ப் பேச்சல்ல! திரிகரணசுத்தியான தீர்மானம்

—o—

### பெருமித வரவேற்பிற் பிரதமர்பேச்சு

—:0:—

மூன்றுகட்டை தூரம் முற்றவெளிவரைக்கும் முதன் மந்திரிக்கு மும்மரமான வரவேற்பு. அலங்கார மின் ஒளி. சிங்கார மாலைகள். பலவிதப் பந்தர். நாட்டுக் கூத்து. மேள வாத்தியம். இந்த வித கோலாகலத்துடன் சேர். ஜோன் கொத்தலவலை வரவேற்பு நிகழ்ந்தது புதன்கிழமை மாலை தொடங்கி நள்ளிரவுவரைக்கும்.

வரவேற்புச் சபையார் வாசித்துக் கொடுத்த உபசார உரைக்கு மறுமொழி கூறுமுகத்தான் முதல்மந்திரி அவர்கள் சொற்பெருக்காற்றும்போது:

இந்த இலங்கை முழுவதிலும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டும் என்று ஐக்கியதேசியக்கட்சி தீர்மானித்திருப்பதில் இருந்தே அதன் பரந்த தேசீயக்கொள்கை தெள்ளத்தெளிய உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும் தேசிய மொழிகள்பற்றிய இந்தத் தீர்மானத்தை அரசாங்கப் பாராளுமன்றக் கட்சியும் ஏற்றுக் கைக்கொண்டிருக்கிறது என்பதையும் அதனை எதுதான் வந்தாலும் உறுதியாக நடைமுறைக்குக் கொண்டுவர எனது அரசாங்கம் சங்கற்பம் செய்திருக்கிறது என்பதனையும் உங்களுக்கு இன்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனது அன்பிற்குரிய தமிழ் மக்களே! இது வெறும் வாய்ப்பேச்சல்ல என்பதனையும், இந்தத் தீர்மானத்தை எதுவந்தாலும் விட்டுக் கொடுக்காது திரிகரண சுத்தியாக அமுல் நடாத்தவே போகிறோம் என்பதனையும் இன்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்துபேசுகையில் சேர். ஜோன்கொத்தலாவல சொன்னதாவது:

பொதுவாக எனது உத்தியோக அலுவல்களின் பொருட்டும் சிறப்பாகத் தமிழ் மக்கள்மீது நான் கொண்டிருந்த வாஞ்சையினாலும் நான் இதற்குமுன் பல தடவைகளில் உங்கள் மத்தியில் வந்திருக்கிறேன். அப்படியாக நான் வந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீங்களெல்லாரும் எனக்களித்த உபசாரமும் காட்டிய மெய்யன்பும் எனது உள்ளத்தில் என்றும் நீங்காத் தனியிடம் வகித்துக்கொண்டன. இன்று நீங்கள் எனக்கு அளிக்கும் இந்த உபசாரம் முக்கிய உபசாரங்கள் எல்லாவற்றையும் மிஞ்சியிருப்பதனைக் கண்டு பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

தென்னிலங்கையி லுள்ள ஒரு சிங்கள சமூகத்தவன், இந்த யாழ்ப்பாணத்துக்கு வந்தால் தான் ஒரு புறத்தியான் என்ற எண்ணம் சிறிதுமில்லாமல், தன் உடன்பிறந்த சகோதர சகோதரிகளுடனேயே தங்குவதான ஒரு உணர்ச்சியைக் கொள்ள முடியும் என்பதனை நினைக்க நினைக்க என் மனம் பெருமிதம் கொள்ளுகிறது. இந்த விதமான சகோதர உணர்ச்சியினையே ஒவ்வொரு யாழ்ப்பாணத் தமிழ் மகனும் தமிழ் மகளும், கொழும்புக்கு அல்லது இலங்கையிற் சிங்களம் பேசப்படும் எப்பகுதிக்குச் சென்றாலும் கொள்ளவேண்டும் என்பது எனது பெருவிருப்பம்.

நாங்கள் இருவகை மொழிகளைப்பேசிப் பலவித சமயங்களை அநுட்டித்து வாழும் பலவித சாதியங்களைச் சேர்ந்தவர்களாயிருக்கிறோம். இவ்வித வேற்றுமைகள் இருந்தாலும், அந்த வேற்றுமைகளுள் ஒற்றுமை காணக்கூடிய ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அதுதான் இலங்கைத் தேசிய இனம் என்ற நம்மெல்லாருக்கும் பொதுவான பெரும் சக்தி. பல்லாண்டு காலமாகவே நிகழ்ந்துவரும் இத்தேசிய இன வளர்ச்சிக்கு உறுதுணையான ஒற்றுமைக்கு இம் மொழிவேற்றுமையும் மத வேற்றுமையும் சாதிய வேற்றுமையும் எவ்விதத்திலேனும் தடையாக இருக்கப்படாது. அப்படியான இலங்கைத் தேசிய இன மகாசக்தி பூரண உருப்பெற வளரும் காலத்திலே பரஸ்பர பகைமைக்கும் சந்தேகத்துக்கும் இடம் இருக்கமாட்டாது. இலங்கை மாதாவின் புத்திரர்களாகிய நாம் எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம் என்ற ஒற்றுமைக் கோஷம் இன்று நேற்றுப் பிறந்ததல்ல. இந்த ஒற்றுமைக் கோஷத்தை உங்களின் மாபெருந் தலைவர்களாய் — ஒப்புயர்வற்ற தேசாபிமானிகளாய் விளங்கிய சேர். பொன்னம்பலம் அருணாசலம், சேர். பொன்னம்பலம் இராமநாதன் போன்ற பெருமக்களே இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திற் செய்து, நாம் எல்லோரும் தன்மானமுள்ளவர்களாய், கேவலம் குறுகிய மனப்பான்மையைவிட்டு பொதுவன்னையாகிய இலங்கை மாதாவுக்குப் பணிசெய்வதனையே பெருநோக்கமாகக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி எமக்குத் தம் பணிகள்மூலம் வழிகாட்டிகளாகப் பொலிந்திருக்கிறார்கள்.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

அரசியல் அலை:

# 'குத்துக் கதைக்' கூட்டங்கள் கொண்டுவரும் கொடுமை.....!

—0—

## தமிழக நன்மையா? தன் அக நன்மையா? வேண்டுகிறார்கள் தலைவர்கள்...........?

—0—

எங்கும் பொன்னம்பலம் என்பதே பேச்சும் ஏச்சும் ... ... ...

—:o:—

தமிழினத்துக்குக் காலம் கிட்டிவிட்டது! பிளவுபட்ட சாதிக்கொரு விமோசனமுண்டா...........? என்றெல்லாங் கவலை கொண்டு மக்கள் தடுமாறிக்கொண்டிருக்கும் வேளையில் யாழ்ப்பாணத்தொகுதித் தேர்தல் ஆட்சேபனை விசாரணை முடிந்தது. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் முறைப்படி தெரிவுசெய்யப்பட்டவரென்றும் அவருக்கெதிராகக் கொணரப்பெற்ற குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவையென்றும் உயர்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்த நாழிகை தொடக்கம் திரு. பொன்னம்பலம் என்ற பெயர் அடிபட்டவண்ணமாகவே இருந்தது அற்குக் காரணமில்லாமலிருக்குமா?

1928-ம் ஆண்டு தொடக்கம் அரசியலில் ஈடுபட்டவர் திரு. பொன்னம்பலம். 1934ம் ஆண்டில் சட்டசபை புகாதிருந்த தமிழர்களைத் தட்டி எழுப்பி மறுபடி சட்டசபை புகுத்தித் தமிழருக்கும் தமிழுக்குமாக திரு. அருணாசலம் மகாதேவாவுடன் உழைத்து வந்தவர் எந்த ஒரு இனமும் இலங்கையிலே தனி ஆதிக்கம் பெறாத வகையில் அரசியல் அமைப்பு இருக்க வேண்டுமென்று 'ஐம்பதுக்கைம்பது' என்று வாதாடியவர். அவரின் வாக்கு வன்மையில் மயங்காதார் யாருமிலர். திரு. செல்வநாயகம், மேற்சபை அங்கத்தவர் திரு. சோ. நடேசன் முதலியவர்கள் இந்த ஐம்பதுக்கைம்பதில் நம்பிக்கை வைத்துப் பக்கபலமாய் உழைத்தவர்கள்.

சொல்வன்மை சோல்பரி விசாரணைக் குழுவை வெல்ல முடியவில்லை. ஐம்பதுக்கைம்பது பேச்சோடே நின்றுவிட்டது.

சிறுபான்மையினருக்கொரு சோதனை காலம் உண்டானதும், திரு. டி. எஸ். சேனநாயக பரிந்து பேசி அபயகரத்தைக் காட்டி நிற்கும்போது தமிழினம் இரண்டு பட்டது. பாராளுமன்றத் தேர்தல் முதல்முதல் வந்ததும் தமிழர் மாநாட்டின் உச்சநிலை உதித்தது. திரு. பொன்னம்பலம் அரசியல் வீரனாய் வெற்றிபெற்று விளங்கினார். ஆனால் காலம் விடவில்லை. தமிழினத்தை ஒன்றாய் இருந்து வாழ்வதற்கு அமைச்சவையில் வாருங்கள் என்ற அழைப்பை, திரு. பொன்னம்பலம் ஏற்றதும் தோற்றியது மறுபடி வேற்றுமை.

# அரசாங்க சேவையாளர் தமிழ் வளர்ச்சிக் கழகம்

இந்தமாதம் 18-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கொழும்பு அரசாங்க செயலாளர் அலுவலக (செக்ரடேரியட்) வாயில் மண்டபத்தில் அரசாங்க சேவையாளர் தமிழ் வளர்ச்சிக் கழக அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று. 30க்கு மேற்பட்ட அரசாங்கப் பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான தமிழ் அன்பர்கள் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தனர். இதுவரை தற்காலிக தலைவராகக் கடமையாற்றிய திரு. சி. சிவபாதசுந்தரம் தமிழ்த்தாய் வணக்கத்தின் பின்னர் சமுகமளித்திருந்தோரை வரவேற்று இத்தகைய கழகத்தின் அவசியத்தை வற்புறுத்தினர்.

வித்துவான் எவ் எக்ஸ். சி. நடராசா கூட்டத்தில் தலைமை தாங்கி "எங்கெங்கு தமிழர்கள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் தமிழ்ச் சங்கங்கள் இருக்க வேண்டும். முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கங்களை நடத்தி தமிழ் வளர்த்த தமிழன், ஒன்றல்ல பல தமிழ்ச் சங்கங்களை நிறுவி தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டு செய்ய வேண்டும்" எனத் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அமைப்புக் குழு சமர்ப்பித்த கழக விதிகளும், நிபந்தனைகளும் சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பின்னர் உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. வித்துவான் நடராசா (அரசமொழிகள் அலுவலகம்) அவர்களையே தலைவராகத் தெரிவு செய்தனர்.

உபதலைவர்களாக வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராசாவும், அரசமொழிகள் அலுவலகத் தமிழ்ப் போதகாசிரியர் திரு. வேலாயுதபிள்ளையும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

பொதுச் செயலாளராக திரு கா. சுப்பிரமணியமும் (அரசாங்க தகவற் பகுதி) உதவிச் செயலாளராக திரு. ச. தோ. புவிராசசிங்கமும் (பிரதம தபால் நிலையம்) பொருளாளராக திரு. சி. சிவபாதசுந்தரமும் (மின்சாரப்பகுதி) திரு. சு. நல்லையா உதவிப் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயற்குழுவிற்கு வேறு பன்னிருவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## பூசகர் தேவை

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமிகோவிலுக்கு ஆசாரி அபிஷேகம் பெற்ற ஒரு பூசகர் தேவை. விரும்புவோர் ஜய வருஷம் ஐப்பசி மீ 1ந் திகதி (17-10.54) க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு மனுப்பண்ணிக் கொள்ளவும்.

வேறு விபரங்களுக்கு மேற்படி கோவில் நிர்வாகஸ்தர் திரு. நா. ஏகாம்பரம் அவர்களிடம் அறிந்து கொள்ளவும்.

இங்ஙனம்
வே. கந்தையா

## கோட்டு விற்பனவு விளம்பரம்

செல்லப்பா கதிர்காமசுவாமியும் பெண் சிவபாக்கியம்
கொக்குவில் கிழக்கு
— வழக்காளிகள்

நம் 10588

சுப்பறமணியம் கைம்பெண் தங்கம்மா சின்னப்பு சுப்பிரமணியத்தின் ஆதனத்துக்கு நிர்வாகியாயும் தனித்தும்

எதிரி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 10588 ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் காணும் ஆதனம் 1954-ம் ஞு ஐப்பசி மாசம் 23-ம் ௳ 23-10-54 சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொக்குவிலில் தெய்வன் தோட்டம் என்னுங்காணி கீ இ. 2 குளி 5 1/4 வானபயிர் செய்பயிர்களும் கொட்டிலும் வடமேற்கில் இருக்கும் கிணற்றில் பங்கும் வளி வாய்க்கால் உருத்தும் மேறசெல்லைக் காணியின் வடக்கெல்லைப் பக்கமாக வளி உருத்தும் மேற்செல்லையில் உள்ள ஒழுங்கைக்குப் போகும், ராசம்மாவுக்கு உரிய 4 மூலை பாதை மேற்படி பாவிப்பு உரித்து புறநீங்கலாக.

எல்லை கிழக்கு சின்னத்துரை சடாசிவத்தின் ஆதனம் வடக்கு கிணற்றுக்குப்போகும்வழி, மேற்கு தாமோதர பிள்ளை முத்துத்தம்பியின் ஆதனம், தெற்கு மார்க்கண்டு பெண் ராசம்மாவும் ஒழுங்கையும் இவை அடங்கிலும்.

V. A. Durayappah,
Commissioner, Valuer
Jaffna 20-9.54
M 131 1-10

கௌரவ காரியதரிசி
அடைக்கலந்தோட்டம்
ஸ்ரீ கந்தசுவாமிகோவில்
பரிபாலனசபை
வட்டுக்கோட்டை
27—9—54.
M 133 1, 8-10

# தேவார பாராயணம்

சிவன் திருவடியை என்றும் மறவாது சிந்திக்கத் தேவாரபாராயணம் பெரும் உதவியாக இருக்கும். மூவர் ஓதிய தேவாரம் முழுதும் பாராயணத்திற்கு அமையமாட்டாது. அவர்கள் பாடிய பல பதிகங்கள் சிதைவடைந்தன. ஒரு இலக்கத்து ஈராயிரம் பதிகங்களில் தற்போது எழுநூற்றுத் தொண்ணூற்றேழு பதிகங்களே அடங்கன் முறையி லுள்ளன. இவ்வெழுநூற்றுத் தொண்ணூற்றேழு பதிகங்களையும் நாள்தோறும் பாராயணஞ் செய்ய எவராலும் முடியாது; இக்கஷ்டத்தை முற்காலத்தி லுள்ள சிவாலய முனிவர் உணர்ந்து, தமக்கு மூவரோதிய தேவாரம் முழுவதையும் ஓதி அடையக்கூடிய புண்ணியத்தைப் பெறும்பொருட்டு அனுக்கிரகங் கிடைக்க வேண்டுமென்று வேண்டினர். இறைவனருளின் வண்ணம் அகத்திய முனிவரால் இருபத்தைந்து ஒப்பற்ற பதிகங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, சிவாலயருக்குத் திரட்டிக் கொடுக்கப்பட்டன. அவைகளே "அகத்தியர் தேவாரத் திரட்டு" என வழங்கும்.

"…… அகத்திய முனிவ
னிருமலத்
தொப்பரு மூவ ரோதுதே வா
முழுதையுஞ் சிவாலய
முனிக்கறி வித்துப்
பழுதிலா வவையட்
பரித்தெடுத் திருபத்
தைந்துயர் பதிகமு
மறிவுறத் திரட்டி
யெண்ணரு மடங்க
லியாவையு முணரும்
புண்ணிய மிவைகொடு
பொருந்து மென்றவன்
றனக்கருள் செய்தனன்
றகவுற வதனுற்
றீதிலா வகத்தியத்
திரட்டினை யுலகி
லோதின ரடங்கலு
மோதின ராவரே"

இவ்விருபத்தைந்து பதிகங்களும் எட்டு அங்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வங்கங்களாவன: இறைவனருள், வெண்ணீறு, அஞ்செழுத்து, கோயில், அரனுருவம், திருவடி, அர்ச்சனை, தொண்டு என்ற எட்டுமாம்.

# சிலாங்கூரில் நடந்த தேவாரப் போட்டி

ஆவணி 20ம் நாள் (5-9-54) காலை 8-30 மணிக்கு ஸ்ரீ கந்தசாமிகோவில் அலங்கார மண்டபத்தில் தேவாரப்போட்டி நிகழ்ந்தது. குவாலாலம்பூர் கிள்ளான் முதலிய சுற்றிடங்களிலுமுள்ள வித்தியாசாலை ஆசிரியர்களும், ஆசிரியைகளும் தகுதிவாய்ந்த மாணவ மாணவிகளைத் தெரிவுசெய்து குறிப்பிட்ட பாடல்களை கெட்டிருப்பண்ணுவித்துப் போட்டியிற் பங்குபற்ற வேண்டிய ஒழுங்குகள் செய்ததன் பயனாக போட்டி சிறப்பாக நடைபெற்றது.

அத்தருணம் போட்டியிற் கலந்துகொண்ட பிள்ளைகளின் தாரதரத்தை நிர்ணயிக்க சங்கத்தலைவர் திரு. இ. ச. அப்புத்துரை அவர்கள் திரு த. குணரத்தினம் அவர்கள், ஸ்ரீ ஆ. வேதையாக்குருக்கள் அவர்கள் ஆகிய மூவரும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

சங்கத்தலைவர் திரு. இ. ச. அப்பாத்துரை அவர்களால் பரீட்சையிற் சித்திபெற்ற பிள்ளைகளுக்கு பரிசுகள் முறைப்படி வழங்கப்பட்டன. பரிசுப் புத்தகங்கள் மூவர் தேவாரம், தனித் தனி திருவாசகம், திருமந்திரம், திருக்குறள், பதினொராந்திருமுறை முதலியன. பரிசுப் புத்தகங்கள் திரு. த. குணரத்தினம் அவர்கள் செலவில் வாங்கப்பட்டன.

## திருத்தொண்டர் குருபூசை

பன்னிரண்டு மணியளவில் பெரியபுராணபடனப் பூர்த்தியை முன்னிட்டு அறுபத்து மூவர் நாயன்மார்கள் பெயர்கள் பொறிக்கப்பட்ட படமும் திருமுறையும் கண்கவர் வனப்புள்ளதாக அலங்கரிக்கப்பட்ட பீடத்தில் வைத்து விசேட பூசைக்குப் பின் மேளவாத்திய ஆலய அலங்காரங்களுடன் வீதிவலம் வந்து இலங்கைத் தமிழர்சங்க மண்டபத்தில் தங்கி மகேஸ்வரபூசை அன்னதானம் நடைபெற்றது. பெருந்திரளான அன்பர்கள் இதிற் கலந்துகொண்டார்கள். பின் திருமுறை ஆலயம் வந்து சேர்ந்தது.

பிற்பகல் 2 மணியளவில் திரு. த. குணரத்தினம் அவர்கள் பெரியபுராணமும் பெண்களும் என்னும் பொருள்பற்றி மேற்கோள்களுடன் விளக்கிப் பேசியதுடன் இதுபோன்று வருடாவருடம் போட்டி ஏற்பாடு செய்யவேண்டுமென அவ் வலியுறுத்திக் கூறினர்கள். அடுத்தபடியாகக் கிள்ளான் சுப்ரமண்ய சாமி கோவில் ப்ரம்மஸ்ரீ தி. ஐயாத்துரைக் குருக்கள் அவர்கள் விராட் புருடலட்சணமே ஆலய அமைப்பு என்றும் மண்டபங்களின் பாகுபாடுகளையும் ஆலயவழிபாடு எவ்விதம் எனபதையும் அதன் பெறுபேற்றையும் சாங்கோபாங்கமாக முன் கேட்டோர் வியக்க விளக்கிக் கூறினர்கள். பின், செகருண் ஸ்ரீ செண்பக விநாயகாலயப் பிரதம குரு ஸ்ரீ அ. வேதையாக்குருக்கள் அவர்கள் பாராயணத்தின் மகிமையும் அனுட்டிக்கும்முறையும் தெளிவாக விளக்கியதுடன் பண்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# ஈழத்தில் இசைநாட்டிய இந்திய சான்றோர்

திரு. மு. சபாரத்தினசிங்கம்

சென்றவாரம் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட எனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்த ஈழத்தில் இசைநாட்டிய பிராமணோத்தமர்களுள், திடசாத்திரத்துடன் எங்கள் மத்தியில் வாழும் ஒரு அறிஞரையுஞ் சேர்க்காமல் விட்டது அடியேன் தப்பு.

இவ்வறிஞரின் புகழ் இங்கு மட்டுமல்ல அவர் தாய்நாடாகிய இந்தியாவிலும் பரவியுள்ளது. சேர். பொன்னம்பலம் இராமநாதன் முதலிய பெரியார்களின் நன் மதிப்பைப் பெற்றவர். ஆரியத்தில் பாண்டித்தியமும், முத்தமிழ்ப் புலமையும், நாவல்லமையும் இவரிடத்தேயொருங்கே யமையப் பெற்றுள்ளன. இவரை "மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார்" எனக் கலையுலகில் விளங்கும் பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதியார்.

இவருடைய "உலகியல் விளக்கம்" எனும் நூலைப்படிக்கும்பொழுது ஏதோ வொரு சங்ககால நூலைப் படிப்பது போன்ற வுணர்ச்சி எழும். இவர் இயற்றிய கவிகள் பல. "பாரதீபம்" எனும் தமிழிலக்கண வசன நூலும் இவர் எழுதியிருக்கிறார். இவருடைய "திருவாசக விரிவுரை" ஓர் அருமையான சமயநூல் என்பது மிகையாகாது.

1952-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தால் "பண்டிதமணி" எனும் பட்டம் வழங்கப்பெற்றவர்.

ஆரிய திராவிட சங்கத்தால் கௌரவிக்கப்பெற்ற இன்னுமொரு இந்திய சான்றோர் உளர். இவர்தான் பண்டிதமணி ந. சுப்பையபிள்ளை அவர்கள். இவர் பூர்வம் சிதம்பரம், பரம்பரை சைவவேளாண் குடும்பத்தைச் சேர்ந்தவர். சிதம்பர நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கல்வி கற்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் "… " பட்டம் பெற்றவர். இவருடைய வித்தியா குரு மட்டுவில் க. வேற்பிள்ளை உபாத்தியாயர் அவர்கள். இவர் தொடக்கத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகக் கடமை பார்த்த பின், ஸ்ரீமான் த. கைலாசபிள்ளை அவர்களால் யாழ்ப்பாணம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராக நியமிக்கப் பெற்றவர். இப்பொழுதும் அவர் அதன் தலைமையாசிரியராக அரும்பெருந் தொண்டாற்றி வருகிறார்.

இவர் செக்கப்ப நாவலரின் தஞ்சைவாணன் கோவை யுரையைப் பரிசோதித்துத் தக்க குறிப்புரைகளுடன் அதைப் பதிப்பித்திருக்கிறார். பல பரீட்சைக்குரிய இலக்கிய பாடப் புத்தகங்களுக்கு உரைநூல்கள் வெளியிட்டிருக்கிறார். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் வெளியீடான "செந்தமிழ்க்கருவூலம்" எனும் இலக்கியத் திரட்டுக்கு உரை எழுதியவருமிவரே. இவரும் பண்டிதமணி நவநீத கிருஷ்ணபாரதியாரைப்போல, யாழ்ப்பாணத்திலேயே நிலையாக இலங்கைப்பிரசையுரிமை பெற்றிருக்கிறார்.

## நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில்

1953ம் ஆண்டு ஆகஸ்டு முதல் 1954ம் ஆண்டு ஜூலாய் முடிய உள்ள

### வரவு செலவு கணக்கு விபரம்:

| | பற்று: | வரவு: |
|---|---|---|
| | | ரூபா, சதம். |
| திருப்பணி நன்கொடை | | 170 25 |
| தென்னந்தோட்டம் குத்தகை | | 873 65 |
| அன்னப்பிராசனம் | | 84 00 |
| அடிமைச் சாதனம் | | 67 00 |
| மாதாந்த அர்ச்சனை | | 283 50 |
| மூலஸ்தானம் சாந்து | | 602 00 |
| கர்ண வேதனம் | | 46 00 |
| தண்ணீர் வார்ப்பு | | 35 66 |
| சகஸ்ரநாம அர்ச்சனை | | 744 00 |
| சென்னம் | | 409 00 |
| மகாசபை அங்கத்தினர் சந்தா | | 200 00 |
| மீசவரி நெல் காணிக்கை | | 1452 00 |
| திருவிழாக் காணிக்கை | | 15449 86 |
| மாதாந்தக் காணிக்கை | | 6987 24 |
| கடை நில வாடகை | | 220 00 |
| அபிடேகம் | | 461 47 |
| பூசை | | 3619 25 |
| | ரூபா. சதம். | |
| வழக்குச்செலவு No. 5694ம் இலக்கம் | 3 04 15 | |
| திருப்பணிச் செலவு | 109 59 | |
| நவராத்திரிச் செலவு | 329 80 | |
| புங்குடுதீவுக் காணிகள் செலவு | 14 50 | |
| நயினாதீவுக் காணிகள் செலவு | 23 00 | |
| கந்தசஷ்டி பூசைச் செலவு | 135 89 | |
| திருவெம்பாவைப் பூசைச்செலவு | 132 97 | |
| யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத்தெரு | | |
| கிட்டங்கிச் செலவு | 42 00 | |
| பொதுச் செலவு | 282 52 | |
| டை கிழமைச்சேதம் 1949ம் ஆண்டு யூலாய் | | |
| 24ம்தேதி V. A. துரையப்பா வசமயில் | 700 00 | |
| சம்பளச் செலவு | 7006 00 | |
| இஸ்டோசனரிச் செலவு | 153 79 | |
| திருவிழாச் செலவு | 7222 64 | |
| பூசைச் செலவு | 1952 75 | |
| படித்தரம் | 2317 70 | |
| வருட வரவு | 7977 58 | |
| ஆக வரவு செலவு | 31704 88. | 31704 88 |

ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில் பரிபாலனசபையார்.

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில்

1954ம் ஆண்டு ஜூலாய் முடிய உள்ள

### இருப்பு விபரக் கணக்கு

| பற்று | ரூபா. சதம், |
|---|---|
| விக்கிரக மூர்த்திகள் | 122 75 |
| தளபாடம் | 12474 14 |
| வெள்ளி இருப்பு | 1498 85 |
| திருவாபரணங்கள் | 7362 50 |
| வாகனம் | 4784 75 |
| பவுண் இருப்பு | 619 40 |
| பசமாடு | 30 70 |
| நெல் இருப்பு | 829 10 |
| கொட்டகை வேலைச்செலவு | |
| உள்வீதி | 12635 82 |
| மூ, சி. துரைசாமி | 237 00 |
| வே. விசவலிங்கம் | |
| (புங்குடுதீவு) | 147 00 |
| ச, ந. கந்தையா | 70 00 |
| பல பெயர் ஏடு | 215 77 |
| காணிக் கொள்வனவு | 4225 00 |
| கச்சேரியில் இருப்பு | |
| (யாழ்ப்பாணம்) | 525 38 |
| 5694ம் இலக்க வழக்கு | |
| அப்பில் பிணை | 200 00 |
| மெர்க்கண்டயில் பேங் | |
| (யாழ்ப்பாணம்) | 515 00 |
| இருப்பு (ரொக்கம்) | 772 40 |
| | 47265 56 |

| வரவு | ரூபா. சதம் |
|---|---|
| கோவில் ... ... ... | 37787 98 |
| கா. பொன்னம்பலம் | |
| நயினாதீவு | 1500 00 |
| வருட வரவு | 7977 58 |
| | 47265 56 |

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிற்பரிபாலனசபையார்.

M 132 1-10-54

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## சிலாங்கூரில் நடந்த தேவாரப் போட்டி

3-ம் பக்கத்தொடர்ச்சி

முறை பாடும் முறையை அவை வரும் ஆனந்தபரவசமடையு மாறு கனிவாகத்தாமே பாடிக் காட்டினார்கள். முடிவில் உயர்திரு. கா. இராமநாதன் பி ஏ பி எல். அவர்கள் பெரிய புராணத்தின் சிறப்பை மேற் கோள்களுடன் நகைச் சுவை ததும்ப விளக்கிப் பெரியபுராணமே பெரிய புராணமென் றார் இதை விடப்பெரிய புராணம் வேறு எங்குமில்லையென் றும் வலியுறுத்திக்கூறினார்கள். பின் தேவார பாராயணத்துடன் நிகழ்ச்சிகள்முடிவுற்றன.

### தேவாரப்போட்டியில் தேர்ச்சிபெற்றுப் பரிசு பெற்றவர்கள்

1வது பரிசு: செல்வி. கு. புவனேஸ்வரி, கிள்ளான், 2வது பரிசு செல்வி க. சின்மயதேவி கிள்ளான், 3-வது பரிசு செல்வன் க. பரமகுவப 4வது பரிசு: செல்வி கு தவமணி தேவி கோலாலம்பூர். 5வது பரிசு செல்வி சு. சரோஜினி தேவி கோலாலம்பூர், 6-வது பரிசு கி பத்மராணி கோலாலம்பூர், 7வது பரிசு செல்வி. க.லோகநாயகி,கோலாலம்பூர், 8வது பரிசு செல்வன். செ இராசரெத்தினம் கோலாலம்பூர், 9வது பரிசு செல்வி கி பூபதி, கோலாலம்பூர், 10வது பரிசு செல்வி மூ. சரோஜனி தேவி கோலாலம்பூர்.

### சிலாங்கூர் சைவ சங்கப் சங்கநிர்வாகம்

வரும் ஆண்டு நிர்வாகிகள் தெரிவு கீழ்க்காட்டியவண்ணம் முடிந்தது திருவாளர்கள்: தலைவர் இ. ச. அப்புத்துரை F.A.C. C. A. F. C. C. S உபதலைவர்: வ. செல்லையா M B.E கௌரவ காரியதரிசி ஆ செல்வநாதன், தனாதிகாரி பொ, தனராசா.

அங்கத்தவர்கள்:

திருவாளர்கள்: கு. சுப்பிரமணியம் B E. M. க. துரையப்பா, க. கனகசபை, அ. தம்பையா, ந. சிவக்கொழுந்து க தம்பிப்பிள்ளை, வ. செல்லத்துரை, S. துரையப்பா. மூ. தனநாயகம், நடராசா, க. கனகசுந்தரம். காரியதரிசி ஆ செல்வநாதன் நன்றிகூறுமுகத்தான் சமயச் சேவை செய்ய வேண்டிய அவசியத்தைப்பற்றியும் எமது இளைஞர்களை இதல்பங்குபெறத் தூண்டி உற்சாகப்படுத்தவேண்டுமென பதையும் வற்புறுத்திச் சொன்னார். பின் கூட்டம் தேவார பாராயணத்துடன்முடிவு பெற்றது.

## கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை மறைவு

பாரதிக்குப் பின் சிறந்த பாடல்களைக் கொருவ சென்ற தமிழ்நாட்டுக்கும் புகழ்பரப்பிய பெரியார் கவிமணிதேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் செவ்வாய்க்கிழமை 28-9-54 பிற்பகல் புதச்சேரியில் தமதில்லத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவருடைய மறைவால் தமிழ் நாட்டுக்குப் பெருந் துன்பக் கடலுள் ஆழ்த்திருக்கின்றது.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
— O —
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
67, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்,

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.
தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.
S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.

பிரகடனம்
திருவாதவூரடிகள்புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளை யவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00.
☞ செந்தமிழ் மொழிவளம்: எங்கள் தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும்பயிற்றுவது; தமிழ்ஆங்கில ஆரம்ப மூன்றாவது வர் தொடக்கம் S. S C. மாணவர் தமக்கும் இன்றியமையாதது; பண்டிதர் ம, வே. திருஞானசம்பந்தப்பிள்ளை புதிய முறையில் இயற்றியது. விலை: 1—60 சதம்.
பிரதோஷவிரதமான்மியம் (புதியபதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40.
சிவராத்திரி விரத மான்மியம் (வசனம்) விலை சதம் 25
அரிச்சந்திரபுராணம்-மயானகாண்டம் பண்டிதர் ம வே தி.ச. எழுதிய பொழிப்புரை இலக்கணக்குறிப்பு நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தரவகுப்புகளுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது [இலங்கை அரசினர் பாடபுத்தக பரிசீலனைச் சபையாரின் அங்கீகாரம் பெற்றது.] விலை சதம் 75.
மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்: மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது விலை ரூ 1—25 ச.
உலகம்பலவிதக்கதை 1. (கோபாலநேசரத்தினம்) ஷைபண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத்தெவிட்டாதது. விலை ரூ. 1—25 ச
ஈழமண்டலசதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்துவிளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ 1-00
சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம்(B.A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமய பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45
"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. மூன்றாம் பதிப்பு வெளிவந்தது. விலை 60 சதம் (அஞ்சல் 10)
முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.
Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarpannai, Jaffna

# தமிழுக்கும் - சிங்களத்துக்கும் சம உரிமை

( 2ம் பக்கத் தொடர்ச்சி )

உள்ளொன்று வைத்துப் புறமபொன்று பேசாது, ஒளிப்பு மறைப்பின்றி, அத்தியந்த விசுவாசமாக வாழ்க்கை நடத்துவதே எனது குறிக்கோள். பொதுவாக இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களையும் சிறப்பாக யாழ்ப்பாண மக்களையும் எதிர்நோக்கிப் பலவேறு பிரச்சினைகள் இன்று தோன்றியிருக்கின்றன. அப் பிரச்சினைகளில அரசாங்கத்தின் கொள்கை பற்றிப் பொய்ப் பிரசாரம் காரணமாக அல்லது தவறான தகவல் காரணமாக அல்லது அவற்றைத் தவறாக விளங்கிக் கொள்வதன் காரணமாக உங்கள் மனதிலே ஏதும் பயம் அல்லது சந்தேகம் தோற்றியிருக்கவுங் கூடும். அப்படித் தோன்றியிருந்தால் எனது நிலையை உங்களுக்கு வெளிந்து திறந்த—சுத்த விதமான ஒளிப்பு மறைப்பின்றிக் கூறி, அச் சந்தேகம் அல்லது பயத்தைப் போக்க வேண்டும் என்ற அவாவே இன்று உங்கள் மத்தியில் என்னை வரச்செய்தது என்பதை இச்சந்தர்ப்பத்தில தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தென்னிலங்கையிலே ஆரோ ஒரு சிலரால் நடாத்தப்படும தீசிங்கள முன்னணி செய்து வரும்முயற்சிகளையிட்டு யாழ்ப்பாணததில் இருக்கும் நீங்கள் மனம் புழுங்கியிருக்கிறீர்கள் என்று கேள்விப்படுகிறேன். இன்று எங்கள் நாட்டிலே நிலவுவது சனநாயக முறை. இச் சனநாயக முறையிற் பங்குபற்றுவதனுல் ஏற்படும் சிக்கல்களை நாங்கள் உண்மையில் உணருபவர்களேயானுல் இந்தத் திரிசிங்கள முன்னணிபோன்ற இயக்கங்களையிட்டுப் பயம் கொள்ள வேண்டியதில்லை! ஒரு சனநாயக நாட்டிலே, அரசாங்கம் விரும்பாத கொள்கையையும் இலட்சியத்தையும் கொண்ட ஸ்தாபனங்கள் இருக்கலாம், அவற்றை அரசாங்கம் தாக்காது இயங்கவிட்டுவிட வேண்டிநேரிடுகிறது. உதாரணமாக, இலங்கையிலே கொமியூனிஸ்ட் கட்சி இருக்கும், அதனை நான் தடை செய்யாதபடியால், என்னை ஒரு கொமியூனிஸ்தன் என்று யாரும் குற்றஞ்சாட்ட முன்வரார். அதேபோல, இத் திரிசிங்கள முன்னணி இருப்பு அதனை நான் தடைசெய்யாதிருக்கும் காரணத்தினுல், யாழ்ப்பாணத் தமிழருக்கு விரோதமான ஒருஇயக்கத்துக்கு நான் ஆதரவாகவிருக்கிறேன என்று என்னை நன்கு அறிந்தவர் எவராவது சொல்லமாட்டார், இந்தத் திரிசிங்கள முன்னணியும் இலங்கையில் உள்ள சகல சமூகங்களையும் பேதமின்றி ஒன்றுக்கும இலக்கைக்கொண்டுள்ளது என்றுதான் அதனோடு சம்பந்தப்பட்டவர்கள சொல்கிருர்கள் எந்தவொரு சட்டத்தைமீறி நடந்தாற்ருன் சனநாயக அரசாங்கம் அதனைக் கவனித்து ஏற்ற நடவடிக்கை எடுக்கும். அது வரையில் பல்வேறு சபைகள சங்கங்கள் தங்கள் முயற்சிகளை நிறைவேற்றவிடப்படும். அவை வளர்வது பொதுமக்களின் ஆதரவைப் பொறுத்துள்ளதாகும். அந்தவகையிலான பொதுமக்கள் ஆதரவுதான் ஐக்கிய தேசியக்கட்சியை இன்று ஆட்சிப் பீடத்தில் வைத்திருக்கின்றது. அவ்வாறுகப் பொதுமக்களது ஆதரவால் அதிகாரம் வகிக்கும ஐக்கிய தேசியக் கட்சியினராகிய நாம் சனநாயகக்கொள்கையைப் பெரிதும மதிப்பதால், பொது மக்கள தம் விரும்பிய வேறு இயக்கங்கள் ஆரம்பித்ததை தடை செய்யவோ, சர்வாதிகாரிகளாகிவிடவோ முடியாதவர்களாயிருக்கின்ருேம்.

---

## வண்ணை வைத்தீசுவர வித்தியாலம்

### புது மண்டபத் திறப்புவிழா

இராமகிருஷ்ண மிஷன் வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பெற்றிருக்கும் மண்டபத்தை சுவாமி யதீஸ்வரானந்தர் ஒக்டோபர் மாதம் 16-ந் தேதி (16-10-54) திறந்து வைப்பார். சுவாமி யதீஸ்வரானந்தர் நெடுங் காலம் சென்னை, மயிலாப்பூர் மடத்துக்குத் தலைவராகவிருந்தார். பின்னர் ஜர்மனியிலும் அமெரிக்காவிலும் தொண்டாற்றியவர். ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளார்.

இவ்விழாவிற் கலந்து கொள்வதற்காக சுவாமி சித்பவானந்தரும் வருகின்ருர். சுவாமி சித்பவானந்தர் திருச்சிக்கு அருகாமையில் உள்ள திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண தபோவனத்துக்குத் தலைவர். அங்கு ஒரு குருகுலம் நடாத்தி வருகிருர். தமிழிற் சிறந்த பேச்சாளர். தமிழில் தர்ம சக்கரம் என்னும் பத்திரிகையை நடாத்தி வருகின்றனர்.

திறப்பு விழாவின் பின்னர் இவ்விரு சுவாமிகளும் யாழ்ப்பாணத்தில் சில நாட்கள் தங்கி விரிவுரைகள் ஆற்றுவார்கள்.

---

## நீதிமந்திரியில் குற்றச்சாட்டு

நகரசங்கத்தின் அனுமதி பெருது மவுன்ற்லவினியாவில் கடற்கரை வீதியில் நீதிமந்திரி ஸ்ரீ விக்கிரமநாயக ஒரு கட்டிடத்தை அமைத்தாரென்று வழக்குத் தொடரப் பெற்றிருக்கின்றது.

---

# வாழ்க்கை வானில்

— வானம்பாடி

### மாபெருங் கூட்ட மாயமென்ன?

வாழ்க்கை வானிலே மாபெருங் கூட்டத்தின் மாயமென்ன? எல்லா வரவேற்புகளும் மாபெரும் வரவேற்புக்கள். எல்லாக் கூட்டங்களும் மாபெருங் கூட்டங்கள் என்ருல் ஒன்றுக்கொன்று இடை வித்தியாசம் எங்கே காண்பது என்கிருர் ஒரு அன்பர்

திரு: ஜி ஜி பொன்னம்பலத்தின் வரவேற்பில் மனித வெள்ளம். அவர் கொள்கைக்கு மாறுன பிரதமர் வரவேற்பில் மனித வெள்ளம். அடுத்த வாரம் இவர்கள் இருவரின் எதிர்ப்பாளர் டக்டர் என். எம். பெரேரா வரவேற்பில் மனித வெள்ளம் பெருகுவது நிச்சயம். கட்டையன் வேடம்மாறிக்கடோற்கசன் ஆனற்போல ஒரே சமூகந்தான் பலவேறு வரவேற்புகளுக்கும் போகின்றன. எனவே சமூகத்தின் கொள்கை யாது?

### உணர்ச்சியில் நிந்து ஊகிக்கலாம்

மரக்கட்டைகள் போன்று வரவேற்பைக் கண்ணுற்று அரசியற் பேச்சைக் கேட்கும் கூட்டத்தில் ஆதரவளிக்கும் கைதட்டுத்தான் அறிகுறி. இதுதான் அபிப்பிராய அளவுமானி. மணித்தியாலங் கணக்காய்ப் பேசக் கேட்டும் ஒரு உரோமமேனும சிலிர்க்காது உடம்பு உணர்ச்சியற்றிருந்தால் அவன் ஆதரவளிப்பவன் அல்ல. அதுபோலப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்திலே ஒரு சிலர் ஓய்ந்த கை தாளம்போட்ட வண்ணம் கொட்டினுல் அது வேருகத் தெரியும். எண்ணுந் தொகையல்ல உள்ளத் துணர்ச்சியையே உற்று நோக்க வேண்டும்.

மாதத்துக்கொரு முறை மலைபோல பாலை செய்யவும், மணவறை போல மண்டபம் நாட்டவும் மக்களிடத்துப் பொன்னேது? வறண்டபூமி, வானம் பார்த்தபூமி என்றெல்லாம் சொல்லுகிருர்களே. வாணவேடிக்கையில் மேளதாளத்தில் மாலையில் பத்தாயிரக் கணக்காய்ப் பணம் செலவு செய்யவுள்ள வளம் எங்கிருக்கிறது. திருக்கேதீச்சரத் திருப்பணிக்கென்ருல் 'பார்க்கலாம் இன்னொரு வேளை' என்பார். கதிரைமலைக்கென்ருல் நான் நேரிற் சென்று காணிக்கை கொடுப்பேனென்பார். ஏழைப்பெண்ணின் விவாகத்திற்குப் பணம் வேண்டினுல் கஞ்சிக்கும் வழியில்லை என்பார். வேலையில்லாத் திண்டாட்டம் வரவேற்பு வேலையிருக்கும் போது பொருத்தமாயில்லையே!

---

## ஐ. நா. சபைத் தலைவர்

ஐ. நா. சபைத்தலைவராயிருந்த ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் லண்டன்மாநகரில் இந்திய தூதுவர் பதவியிலமைய அவருடைய இடத்தில் ஸ்ரீ ஈல் கேவன் கிளெவென்ஸ் (நெதர்லண்ஸ்) ஐ. நா. சபைத் தலைவராயமர்கின்ருர்.

---

## மாதர்சங்கத்தின் முன்மாதிரி?

கற்கோவளம் மாதர் முன்னேற்றச் சங்க வருடாந்த விழாவில் மது அருந்துவோரை மணஞ் செய்வதில்லை என்றும் சீதன வழக்கத்தைக் கண்டித்தும் இருபிரேரணைகள் நிறைவேற்றப்பெற்றன.

---

# உங்கள் நக்ஷத்திரம்?

## எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

**இவ்வாரப் பலன்கள், 3—10—54 —— 9—10—54**

**மேடராசி அசுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

பிதாவழிச் சுற்றத்தவர் யோசிக்க வைப்பார்கள். ஞாயிறன்று கவலைப்படத் தருவதாயிருக்கும். இனத்தவர்களைத் திருப்தி செய்ய இயலாததாகும். பணத்தொல்லைகளும காணப்படும.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

புதுக் கொடுக்கல் வாங்கலிலே தலைப்போடாதீர் நண்பர்கள் சொற்படியே நடப்பார்கள், அவர்களின் உதவியில் அதிக நம்பிக்கை வைக்காதீர் கிட்டியதாய்ப் பழகியவர்கள் தொந்தரவிற் கொண்டு செலுத்திவிடக்கூடும், திங்கள் செவ்வாய் புதன் கவனமாய் இருத்தல் வேண்டும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம 1,2,3**

புதிய முயற்சிகள் நற்பலனைக் கொடுக்கும். பண நயமும் எதிர்பார்க்கப்படலாம் புதன் வியாழன் வெள்ளி விசேஷத்தை வரவழைக்கக்கூடும் குடும்பக் குழப்பம் ஏற்படலாம், மற்றைய நாட்கள் நற்பலனைத் தரும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

விவாகவழிச் சுற்றத்தவர் தொல்லையை உண்டாக்கக் கூடும். குடும்பக் கஷ்டம் உடம்புநிலை சீர்குன்ற இடமுண்டு. உத்தியோக முறையில் நலந்தரக்கூடிய வாரம். ஆனல் வேலைக்கஷ்டம் கூடும் வெள்ளி மாலை சனிக்கிழமை அவதானமாக இருக்கவேண்டும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.**

சொந்தமுறையிலும் குடும்ப அலுவல்களிலும் தேர்ச்சி காணப்படும். போட்டியிடுபவர்கள் தோற்றுப்போவார்கள். காணிகளில் விருத்தி இலாபம் பெறமுடியும்

**கன்னிராசி உத்திரம 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம.**

இந்தவாரத் தொடக்கம் குடும்பச் சூழல அமைதியடையக்கூடும் பண இலாபமும் கீர்த்தியும் எதிர்பார்க்கப்படலாம், பயிர்ச் செய்கையில அநுகூலம் அடைய இடமுண்டு கிட்டப்படி கடமை வயத் தொடர்ந்து ஆற்றுக.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம 1,2,3ம் பாதம**

தேகசுகம் பாதிக்கப்படக் கூடும். ஆனல் கடுமையான நோய் ஏற்பட இடமில்லை புது அலுவல்களை ஆரம்பிக்காதீர் நாளாந்த வேலையோடு திருப்தியாயிருந்தால அநுகூலம் கிடைக்கும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம அநுஷம், கேட்டை.**

தப்பபிப்பிராயம் நீங்கிப் புது நட்புண்டாக இடமுண்டு. புது முயற்சிகள் நற்பலன் தரும். முன்னர் இழந்தொன்றை மறுபடி பெற முடியும் வீர முயற்சிகளில் அநுகூலத்துக்கிடமுண்டு.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.**

உத்தியோக முறையிலும் சொந்த வகையிலும் தேர்ச்சிக்கிடமுண்டு. கடல்கடந்து வியாபாரத் தொடர்பிருப்பின அவ்வழி இலாபம் நிச்சயமாய்க் கிட்டும். ஆனல் குடும்ப நிலைமை சீர்கலாமலே யிருக்கும்.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

சாத்திராதயம் ஏதும் கிடைக்கும் இதுவரையிருந்த எதிர்ப்புச் சிறிது சறிதாய்க் குலைந்து போகும், குடும்ப அமைதியும கீர்த்தியும் எதிர்பார்க்கப்படலாம்,

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

உடம்பு நலத்தைப்பற்றிக் குறிப்பாய்க் கவனமெடுக்க வேண்டும். கடுமையான சுவீனம் தோற்றக் கூடும். சிறிய விபத்துக்களும் காணப்படலாம். வாகனங்களைப் பற்றிக் கவனமாயிருத்தல் வேண்டும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

புதிய முயற்சியில் முதலிட நல்ல வாரம். பயிர்ச்செய்கையும் நற்பலனளிக்கும் நண்பர்களும சுற்றத்தவர்களும் மிகவும் உதவியாயிருப்பர்.

# நித்தியத்தில் அநித்தியமும் அநித்தியத்தில் நித்தியமும்

( 1ம் பக்கத் தொடர்ச்சி )

ஏனையவற்றைத் தமது எண்ணிறந்த சக்திகளாற் பிறப்பித்து விடுகின்றது.

மட்கலங் கரந்தால் மண்ணும், பொற்கலம் போனாற் பொன்னும். அதுபோல அநித்தியம் மறைந்தால் நித்தியத்தின் சக்திகளாம். சக்திகளையுடைய சக்திமானே நித்தியம். நித்தியத்திலே தோற்றிய உலகத்தை நித்தியமென்று அநித்தியமென்றுரைத்தல் உபசாரமேயாகும். "முழுதும் உண்மை" என்பதுவே பேருண்மை. நாங்களும் நித்தியத்தில் இருக்கின்றோம்—எல்லாம் நித்தியத்திலேயே இருக்கின்றன. இது சத்தியம். ஒரு பாத்திரத்துள் வார்த்துக் காய்ச்சிய நீர் உருத்திரிந்து ஆவியாய்க் கரந்திட நீர் வற்றியது என நாம் சொல்வது போல உலக ஒடுக்கத்தை உலகம் அழிந்தது என்கிறோம். உடல் நீக்கத்தை அவன் இறந்தான்—அவள் இறந்தாள் — அது இறந்தது — அவை இறந்தன என்கிறோம். நினைந்தது மறக்கப்படுகின்றது; மறந்தது நினைவுக்கு வருகின்றது; நெருநல் நாங்கண்ட பகலே இன்றும் வந்தது; அதுவே நாளையும் வரும். பகலோன் உள்ள அளவும் அப்பகல்தானே வரும். இவற்றைக் கண்டு பிறந்தது இறக்கின்றது—இறந்தது பிறக்கின்றது-தோன்றின மறையும் — மறைந்தன தோன்றும். நித்தியத்தில் அஃதாவது பிறவாதும் இறவாதும் — தோன்றும் மறைநாதும் — எல்லாமாயும் அல்லவாகியும் இருப்பதில் — அதன் சந்நிதியில் புதிது புதிதுபோல் நடைபெறும் மாயங்களைக் கடந்து இருந்தாங்கிருக்கும் அந்த நியதியைக் கண்ட தபோதனர்கள், நமது சந்ததியில் அவதாரஞ் செய்து, நமக்கு இதனைச் சொல்லித் தாராராயின் நாமேங்கள் அழுக்கு நிறைந்த மனத்தால் இதனை எண்ணவும் வல்லவர்களாவோமோ? அவர்தம் திருவடிகளைச் சென்னிமேற் கொண்டு மேலும் இதனைச் சிந்தை செய்வாம்.

மெய், வாய், கண், மூக்குச் செவியென்னும் ஞானேந்திரியங்கள் — சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்குக்கள்—சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னுங் குணங்கள்—தைசதம், வைகாரிகம், பூதாதிகம் என்னும் அகங்காரங்கள்—பிரதத்துவங்கள் ஆகிய இவையெல்லாம் எதனாற்றொழிற்படுகின்றன? நினைப்பும் மறப்பும் எதனால் உண்டாகின்றன. விடயங்களைப் பற்றி அவற்றுள் அழுந்தி இன்ப துன்பங்களை நுகர்வது எது? சுவர்க்க—மத்திய — பாதாள உலகங்களிற் போக்குவரவு புரிவது எது? தத்துவக் குப்பைக்குள் குன்றிமணி போல் விளங்குவதெது? மெய் வாய் முதலிய குப்பைகள்தான் நாமோ? குப்பைகளைப் பெருக்கித் தள்ளின் எஞ்சி நிற்பது எதுவோ? நாம் என்பது வெறும் நினைப்பு மாத்திரையோ? அல்லது அநித்தியத்தில் நித்தியமோ? என்று இவ்வாறு திருவருளை முன்னிட்டுச் சிந்திப்போர், தாம நித்தியத்தில் இருப்பதை உணர்வர். அறிவு சொரூபமாகிய எமக்கு இன்பமேது? துன்பமேது? இறப்பேது? பிறப்பேது? மோக்ஷமேது? நரகமேது என்பதனையும் அவர் தாம் அறிய வல்லவராவர்.

உள்ளதன்றி இல்லாதது வாராது. நித்தியத்தில் அநித்தியமும் அநித்தியத்தில் நித்தியமும் இருப்பதை உணர்ந்து உணர்ந்து உலகாதீதத்து அஃதாவது பாசக்கூட்டத்தார்க்கு அதீதமாய் உள்ள நித்தியத்தோடொன்றாகிய உத்தமர்தான் தன்னை அறிந்தவர் — தன்னை இரட்சித்தவர். அவரே நம்மையும் இரட்சிக்க வல்லவர். நாங்கள் நித்தியர்—நாங்கள் பார்ப்பதெல்லாம் நித்தியம்.

முழுதும் உண்மை

## இந்த முறை எப்படி?

இந்திய அரசாங்கம் தங்களுக் கெதிராய்ப் போர் மூளந்திருக்கிறதென்றும் போர்த்துக்கேய அரசாட்சியில் தாங்கள் நன்கு இன்புற்று வாழ்கின்றார்களென்றும் வெளியிடுமாறு கோவா மக்களைக் கோவா அரசாங்கம் பலவந்தப்படுத்துகின்றதென்றும், அவ்வாறு கைச்சாத்திட்டு வெளியிடும்படி அச்சுப் பிரதிகள் உயர்தர ஆங்கிலக் கல்லூரிகள் சைவகோயில்கள் ஆகியவற்றின் முகாமைக்காரருக்கும் வியாபாரிகளுக்கும் பிற அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றனவென்றும், பிள்ளைகளின் பெற்றோர் பாதுகாவலர் முதலியனாவரும் கைச்சாத்திட்டனுப்பாவிட்டால் மிகுந்த தீமை விளையுமென்றும் எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதாய்ச் செய்தி ஒன்று கூறுகின்றது.

# தமிழ் மக்களுக்கு மிருத்து சஞ்சீவி

1-ம பக்கத்தொடர்ச்சி

சிவியாகத் தமிழ் மக்கள் கருதத் தொடங்கி விட்டார்களாகலின் ஒற்றுமைக்கு வழிகாணவேண்டுமென்று அவர் கூறியவுடனே தமிழ்ச் சமூகத்தில் ஒரு கிளர்ச்சியுண்டாயிற்று. அவருடைய சொல் செய்கையில் வருமா அல்லவா என்ற ஒரு சந்தேகம் மாத்திரமில்லா மனங்களைக் கவர்ந்து நிற்கின்றது. இச் சந்தேகத்தை நீக்குதல் ஸ்ரீ பொன்னம்பலத்தின் கடமையாகும்; தமது கட்சியினராகிய ஸ்ரீ இராமலிங்கம், ஸ்ரீ குமாரசாமி ஸ்ரீ தம்பிஐயா முதலியோரின் எண்ணமும் வெளியாகதல் வேண்டும். அந்தப்படியாக, தமிழரசுக் கட்சியினர் ஐக்கியதேசியக் கட்சியினர் முதலிய யாவரும் அன்பும் சத்தியமும் பதிந்த நெஞ்சத்துடன் ஒன்றுபட முயலவேண்டும். திரு. பொன்னம்பலமும் அவர்களுடன் அளவளாவி ஒற்றுமைக்கு வித்திட வேண்டும். இப்படிச் செய்வதனால் அவருடைய பெருமை குறையாது.

இவ்வாறு செய்ய ஸ்ரீ பொன்னம்பலம் முயல்வாரேயானால், சிறிய சுயநல எண்ணங்களை நீத்து தமிழ்ச் சமூகத்தின் பெருநலனுக்காகத் தமிழறிஞர்கள் யாவரும் ஒத்துழைத்தல் இன்றியமையாதது வேண்டப்படும். அகங்கார மமகாரங்கள் கிளர்ந்து வளரவிடாது அடுத்து சத்தியத்தைச் சித்தத்திற் பதித்து இத்துறையில் ஒத்துழைக்க முயலுதல் தமிழ்மக்களின் நலனை உண்மையாய் விரும்பும் ஒவ்வொரு பெருமகனின் மீதும் பொறுத்த கடனாகும்.

இத்தகைய சித்தசுத்தியுடன் பெருமக்கள் கூடும்போது ஸ்ரீ பொன்னம்பலம் பிறவழியிற் செல்ல முடியாது. விவேகியாகிய அவர் மக்கள் மனநிலையை அறிந்தபின் வேறு நெறியிற் செல்ல மாட்டார் என்று நாம் நம்பி முயலுதல் நன்று. முயற்சி வீணாகமாட்டாது. 'ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே" என்றபடி எம் சமூகம் தாழ்வுற்று வருந்துகின்றது. இந்நிலைமையை நீக்கி ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே என்றபடி நாம் வாழ்வெய்தும் பொருட்டு ஒன்றுபடுவோமாக.

---

# இந்தியாவிலும் இசைநாட்டிய ஈழத்துச் சான்றோர்

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

ரது சந்நிதியிற் சென்று வீழ்ந்து வணங்கி எழுந்து விநயமாக நின்று "தாமே, வேதாரணியேசுரருடன் நீ எழுந்தருளியிருக்கின்றதாகிய இந்தத் திருக்கோயிலைக் கருங்கற் றிருப்பணியால் அமைக்க வேண்டுமென்று அடியேன் ஆசைப்படுகிறேன்; என்னுடைய ஆசையை நிறைவேற்றப் போதிய பொருளில்லை; என் கவலைகளையெல்லாம் நீயறிவாய்; தஞ்சாவூர் மகாராசன் தன்னுடைய ஒரேயொரு மகளைப் பிடித்த நோயை நீக்கி வைப்பவருக்குப் போதிய சன்மானஞ் செய்வதாக விளம்பரஞ் செய்திருக்கிறான்; அன்னையே, சகல சராசரங்களையும் பெருமற்பெற்ற பராபரையே, அந்த இராசகுமாரியைப் பிடித்த நோய் நீங்கும்படி அடியேனுக்கு நீ அநுக்கிரகஞ் செய்தால், நான் அங்ஙனஞ் செய்து அரசன் தரும் பொருளை வாங்கிக் கொண்டு வந்து, நீயும் உன் இறைவரும் எழுந்தருளியிருக்கும் இக்கோயிலைக் கருங்கற் றிருப்பணியாக நிறைவேற்றி வைப்பேன்" என்று குறையிரந்து மீண்டு தமது வாசஸ்தானத்தையடைந்து போசனம் முடித்துக் கொண்டு அன்றிரவு சிந்தனை அதுவேயாகப் படுத்துறங்கினர்.

உலகமாதாவாகிய ஈசுவரி தம்பிரானுக்குச் சொப்பனத்திலே தோன்றி "அன்பனே, தில்லைநாதா, நீ நாளைக்கே புறப்பட்டு ஒரு மந்திரவாதி போல் உடை தரித்து அரசனுடைய மாளிகையடைந்து, அந்த இராசகுமாரத்திக்கு விபூதியிட்டு எமக்குரியதாகிய மந்திரத்தை அவள் முன்னிலையில் நீ செபிக்க, அவளைப் பிடித்த நோய் நீங்கும். தன் பொருட்டு அரசன் உனக்குத் தருந் திரவியத்தை ஏற்றுக்கொண்டு வந்து நீ விரும்பிய பிரகாரந் திருப்பணி செய்க" என்று கூறி மறைந்தருளினள் எம்பெருமாட்டி.

இறைவியின் ஆஞ்ஞைப்படி தம்பிரானர் தஞ்சை மாநகரையடைந்து தாம் அங்குச் சென்ற நோக்கத்தை அரசனுக்குத் தெரிவித்தார். கவலைக் கடலில் மூழ்கிக் கிடந்த அரசன் தம்பிரானைப் பார்த்து "அன்பரே, சிறந்த மந்திரவாதிகளும் வைத்தியர்களும் பலவாறு முயன்றும் மாற்ற முடியாத என் மகளின் கொடிய நோயை நீர் மாற்றுவீர் என்று முற்படுதல் புத்தியல்ல; கருமங் கைகூடாவிட்டால் என் கவலை இன்னும் அதிகப்படும்" என்று சந்தேகப்படச் சொன்னான். "அரசே, யாழைப் பழித்த மொழியம்மையின் திருவருள் கொண்டு உமது மகளைப் பிடித்த வல்வினையை நீக்குவேன்; சந்தேகப்படுதலை யொழிந்து ஆகவேண்டிய ஆயத்தங்களைச் செய்யுக" என்று தம்பிரான் மனத் திடத்தோடு சொல்ல அரசன் ஆகவேண்டியவற்றை யுடனே செய்தான்.

அசற்கெனச் சுத்தஞ் செய்து கோலமிட்டு மாலைகள் தொங்கக்கட்டித் தீபமேற்றித் தூபமிட்டு ஒளிர்கின்ற மண்டபத்தில், அரசகுமாரியை வந்திருக்கச் செய்து, அவளுக்கெதிரே தாமும் இருந்து கொண்டு, இறைவிக்குரிய திருமந்திரத்தைச் சொல்லி விபூதியிட, அவளைப்பிடித்த நோயனைத்தும் நீங்கி, நோய் பிடிப்பதற்கு முன் இருந்த அழகு அறிவு என்னும் இவற்றைக்காட்டிலும் பேரழகோடும் பேரறிவோடுங் காணப்பட்டாள். தம்பிரானையுந் தன் பெற்றோரையும் வணங்கினாள். அங்குப் பலர் நிற்பதைக் கண்டு நாணமுற்று ஒதுங்கி நின்றாள்; அரசனும் அவன் தேவியும் சுற்றமித்திரரும் அந்த நேரத்திற் கொண்ட ஆநந்தத்திற்கு எல்லை சொல்ல முடியுமா!

அரசன் சில நாள் தம்பிரானைத் தன் மாளிகையில் இருக்கச் செய்து உபசரித்து வேதாரணியத் திருக்கோயிற் றிருப்பணியைத் தம்பிரான் நினைத்தபடி செய்வதற்குப் போதிய திரவியமும், மூவாயிரம் வேலி பரப்புக் கொண்ட உப்பு விளையும் நிலமும் உவந்தளித்தான். அந்நிலம் இன்றும் வேதாரணிய ஆதீனத்திற்கே உரியதாயிருக்கின்றது. தம்பிரான் தாம் நினைத்தவண்ணம் திருப்பணியை நிறைவேற்றி அத்தலத்தின் பரிபாலனத்தையும் ஏற்று நடத்திவந்தார், இப் பெரியார் திருவாரூர்த் தியாகராசப் பெருமானுக்கு ஓர் சிறந்த தேரை அமைப்பித்தார் என்றும், சிதம்பரத்திலும் பல திருப்பணிகளைச் செய்து வைத்தார் என்றும் கர்ணபரம்பரையுண்டு.

இவர்காலமும் ஞானப்பிரகாசர் காலமும் ஒரே காலமாகும். ஸ்ரீமத் தாயுமானசுவாமிகளும் இத் தம்பிரானுடைய வழித்தோன்றல் என்று கூறுவர்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prak sa Press, Vannarponnai Jaffna on Friday October 1 1954.